# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

## Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

**www.tsch.org.au** **info@tsch.org.au**


# அரையாண்டுப் பரீட்சை 2019

**ஆண்டு: 4** **திகதி: 22/06/2019**

**நேரம்: 2 மணித்தியாலங்கள்**

**ஆசிரியர்: திருமதி. நித்யலக்சுமி இரவீந்திரராஜா**
**உதவி ஆசிரியர்: செல்வி ஜனனி குலராஜா**

**மாணவர் பெயர்:** ________________________________

| **வினாக்கள்** | **புள்ளிகள்** |
|---|---|
| வினா 1 | |
| வினா 2 | |
| வினா 3 | |
| வினா 4 | |
| வினா 5 | |
| வினா 6 | |
| வினா 7 | |
| **மொத்தப் புள்ளிகள்** | |

| வினா இல | 1 | புள்ளிகள் | 20 | பக்கம் | 2 |
|---|---|---|---|---|---|

**பந்தியை வாசித்து அதிலிருந்து கீழே உள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

சிட்னியில் சித்திரைத் திருவிழா

சிட்னி தமிழ்க்கலை மற்றும் பண்பாட்டுக் கழகமும், இந்தியாவின் தமிழ்நாடு கிராமியக் கலைகள் வளர்ச்சி மையமும் இணைந்து **சிட்னியில் சித்திரைத் திருவிழாவை** ஒவ்வொரு ஆண்டும் நடாத்தி வருகிறது. கடந்த வருடம் இவ்வமைப்பு தனது ஏழாவது ஆண்டு விழாவை Blacktown இல் நடாத்தியது. இதன் போது சிட்னி வாழ் மக்கள் மட்டுமன்றி பிறமாநிலங்களைச் சேர்ந்த தமிழர்களும் பெருமளவு கலந்து கொண்டனர். தமிழ் நாட்டிலிருந்து வந்த கலைஞர்களின் கரகாட்டம், காவடியாட்டம், பொய்க்கால்குதிரை ஆட்டம், மயிலாட்டம், காளையாட்டம் போன்ற கிராமிய நிகழ்ச்சிகள் நடைபெற்றது. அத்துடன் அவுஸ்திரேலிய உள்ளூர்க் கலைஞர்களின் பல்வேறு நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. அமைப்பின் செயலாளர் அனகன்பாபு விழாவிற்குத் தலைமை தாங்கினார்.

அவுஸ்திரேலிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், சிப்ஸ் தமிழ் வானொலி ஆகியவை நிகழ்ச்சிகளை நேரடி ஒலிபரப்புச் செய்தன. இந்திய மற்றும் தமிழக உணவுவகைகள் விற்பனை செய்யப்பட்டன. அத்தோடு குழந்தைகளுக்கான பல பொழுது போக்கு அம்சங்களும் இடம்பெற்றன. அவுஸ்திரேலிய மாநில அமைச்சர்களும், பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் இதில் கலந்து சிறப்பித்தனர்.

1. இப்பந்தியில் கூறப்பட்டுள்ள விழாவின் பெயர் என்ன?

________________________________________

2. கடந்த வருடம் எத்தனையாவது சித்திரைத் திருவிழா Blacktown இல் நடைபெற்றது?

________________________________________

3. இவ்விழாவில் இடம்பெற்ற கிராமிய நிகழ்ச்சிகளின் பெயர் இரண்டு தருக?

________________________________________

4. இந்நிகழ்ச்சிகளை நேரடி ஒலிபரப்புச் செய்த வானொலி ஒன்றின் பெயர் தருக?

______________________________

5. இவ்விழாவிற்குத் தலைமை தாங்கியவரின் பெயர் என்ன?

______________________________

(5 x 4 புள்ளிகள்)

| வினா இல | 2 | புள்ளிகள் | 10 | பக்கம் | 3 |
|---|---|---|---|---|---|

**2A ஒத்த சொல் தருக**

1. அந்தம் : ______________________________
2. ஆடை : ______________________________
3. இலகு : ______________________________
4. உற்சாகம் : ______________________________
5. எதிரி : ______________________________

(5 x 1 புள்ளிகள்)

**2B எதிர்ச் சொல் தருக**

1. கோபம் : ______________________________
2. சுத்தம் : ______________________________
3. தண்ணீர் : ______________________________
4. காடு : ______________________________
5. வலம் : ______________________________

(5 x 1 புள்ளிகள்)

| வினா இல | 3 | புள்ளிகள் | 10 | பக்கம் | 4 |
|---|---|---|---|---|---|

**சேர்த்து எழுதுக**

1. தமிழ் + மொழி : ______________________
2. காலை + வேளை : ______________________
3. மாடி + வீடு : ______________________
4. பலா + பழம் : ______________________
5. கிளி + கூடு : ______________________

(5 x 2 புள்ளிகள்)

| வினா இல | 4 | புள்ளிகள் | 10 | பக்கம் | 4 |
|---|---|---|---|---|---|

**பொருத்தமான சொற்களைக் கொண்டு இடைவெளியை நிரப்புக**

சகவாழ்வு, நீர்வாழ், காற்றை, மிருதங்கம், நண்பர்களுடன்

1. சிட்னியில் ______________ உயிரினக்காட்சிசாலை ஒன்றுண்டு.
2. நாம் சுத்தமான ______________ சுவாசிக்க வேண்டும்.
3. ஆதிவாசிகள் முதலைகளுடன் சமாதான ______________ நடாத்தினார்கள்.
4. நாம் நல்ல ______________ பழக வேண்டும்.
5. தமிழர்களின் இசைக்கருவிகளில் ஒன்று ______________ ஆகும்.

(5 x 2 புள்ளிகள்)

| வினா இல | 5 | புள்ளிகள் | 10 | பக்கம் | 5 |
|---|---|---|---|---|---|

**வசனமாக ஒழுங்கமைக்க**

1. பேருந்தில் / சென்றோம் / கன்பராவுக்கு / நாங்கள்

2. நெல்லிக்கனியை / அதிசயமான / ஔவையாருக்கு வழங்கினான் / அதியமான்

3. பலஇன / வாழ்கிறார்கள் / மக்கள் / அவுஸ்திரேலியாவில்

4. விமானத்தில் / கடவுச்சீட்டு / வேண்டும் / பயணம் செய்ய

5. தமிழ்ப் / பாரதியார் / ஒரு / புலவர்

(5 x 2 புள்ளிகள்)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வினா இல | 6 | புள்ளிகள் | 20 | பக்கம் | 6 |

**பின்வருவனவற்றில் ஒன்றைப்பற்றி உமது உறவினருக்கு அல்லது நண்பருக்கு (50 சொற்கள்) ஒரு கடிதம் எழுதுக.**

- அண்மையில் உமது பாடசாலையில் நடந்த கலைவிழா
- உமது பாடசாலையில் நடந்த தைப்பொங்கல் விழா

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வினா இல | 7 | புள்ளிகள் | 20 | பக்கம் | 7 |

**பின்வருவனவற்றில் ஒன்றைப்பற்றி 50 சொற்களுக்கு குறையாமல் கட்டுரை ஒன்று எழுதுக.**

- எனது செல்லப்பிராணி
- கங்காரு
- விமானப் பயணம்